இல்லாத அளவிற்கு உயர்ந்த சந்தன மரங்கள் இருக்கின்ற காரணத்தினாலே, இதனாலே திருட்டுப் போகின்ற வாய்ப்பும், ஏற்படும் என்று விரைந்து வருகின்ற தார்ச் சாலைகளை அமைத்தால், விரைந்து வாகனங்களை வைத்துக்கொண்டு சந்தன கட்டைகளைக் கடத்துவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்ற நிலையும் இந்தத் துறையின் சார்பாக பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய எண்ணத்தை நிறைவேற்றுகின்ற வகையில் மத்திய அரசுக்கு இந்த அரசு உடனடியாக பரிந்துரைச் செய்து, மத்திய அரசு அனுமதி தந்தால் அந்தப் பாதைகளை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 466, திரு. காஞ்சி பன்னீர்செல்வம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

466—

அரக்கோணம்—செங்கல்பட்டு மின்சார இரயில்.

*16343—திரு. காஞ்சி பன்னீர்செல்வம்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பார்—

அரக்கோணத்திலிருந்து காஞ்சீபுரம் வழியாக செங்கல்பட்டிற்கு மின்சார இரயில் விடுவதற்கு மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரக்கோணத்திலிருந்து காஞ்சீபுரம் வழியாக செங்கல்பட்டிற்கு மின்சார இரயில் விடுவது பற்றி தற்போது எதுவும் பரிசீலனையில் இல்லை எனத் தென்னக இரயில்வே தலைமை திட்ட மேலாளர் தெரிவித்துள்ளார். எனவே, இது குறித்து மத்தியஅரசை வற்புறுத்த அவசியமில்லை எனக் கருதப்படுகிறது.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் எனக்கு இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே நான் குறிப்பிட்டதை போல, நான் நாடாளுமன்றத்திலே இருக்கின்ற நேரத்திலே பலமுறை வலியுறுத்தி அதற்கு செயல்வடிவம் தருவோம் என்று தென்னக ரயில்வே மூலமாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது.

1993 ஏப்ரல் 26]

அந்தக் கடிதத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே தருகிறேன். மத்திய அரசுக்கு அதைப் பரிந்துரைச் செய்து ஆவன செய்வாரா என மீண்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த நேரத்தில் அவருக்குக் கடிதம் வந்ததாகச் சொன்னார். இன்றைக்கு அது போன்ற குறிப்புகள் என்னிடத்திலே, மத்திய அரசிடத்திலே இல்லை. இருந்தாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கடிதத்தை தருவார்களானால் மத்திய அரசிடத்திலே அதை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. து. வரதராஜன்.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணத்திலிருந்து செங்கல்பட்டுக்கு ரெயில் கண்டுபிடித்த காலத்திலே போடப்பட்ட அந்த பாதைகள் மிகவும் பழுதடைந்து, மிகவும் பராமரிப்பு இல்லாமல் 40 கிலோ மீட்டர் வேகம் செல்கின்ற அளவிலே அந்தப் பாதைகள் இருக்கின்றன. ஆனால் வடநாட்டிலிருந்து வருகின்ற கூட்ஸ்களும் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சென்ட்ரல் சப்ஜெக்ட். அதில் இருக்கக்கூடிய குறைபாடுகள் பற்றி எல்லாம் இங்கே சொல்ல முடியாது. அதை மின்சார மயமாக்குமாறு மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமா என்பது பற்றித்தான் கேள்வி. இங்கே அதிலே உள்ள குறைபாடுகளை எல்லாம் நீங்கள் பேச முடியாது. நாடாளுமன்றத்திலேதான் பேசலாம். பரிந்துரை செய்வது பற்றிய பிரச்சினையில் மட்டும் கேள்வி கேளுங்கள்.

திரு. செ. து. வரதராஜன் : ஆகவே, அரக்கோணத்திற்கு மின்சார ரெயில்கள் செல்கின்ற பாதைகள் இருக்கின்றன, சென்னையிலிருந்து அரக்கோணத்திற்கு செல்கின்ற பாதைகள், அதுபோல தென்னாட்டிற்குச் செல்கின்ற பாதைகள் எல்லாம் மின்சார ரெயில் பாதைகளாக இருக்கின்றன. இந்த செங்கல்பட்டிலிருந்து அரக்கோணத்திற்கு செல்கின்ற பாதையில் மட்டும் டீசல் மற்றும் புகைவண்டி என்ஜின்களாக இருக்கின்றன. ஆனால் லோக்கல் ஷெட் செங்கல்பட்டுக்கு இரண்டு என்ஜின்களுக்கும் மெயின்டெனன்ஸ் செய்ய வேண்டிய நிலைமை அரக்கோணத்திலும் செங்கல்பட்டிலும் இருக்கிறது. ஆகவே, இடைப்பட்ட இந்த இடத்திற்கு மின்சார பாதைகள் போடுவதால் மிகக் கூடுதலான வசதிகள் ஏற்படும் என்பதனை

அறிந்து அதனை கவனத்தில் கொண்டால் மத்திய அரசுக்கும் அது லாபகரமாக அமையும். ஏன் என்றால் இரண்டு லோகல் ஷெட்டை மெயின்டெனன்ஸ் செய்யாத நிலைமை இருக்கின்ற காரணத்தினால் அதைப் பரிந்துரை செய்தால் மத்திய அரசு ஆவன செய்யும். தமிழக அரசு பரிந்துரை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறபோது ரெயில் கண்டுபிடித்தபோதே அந்தப் பாதை அமைக்கப்பட்டது, அது பழுது அடைந்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இதுபோன்ற சில இடங்கள் தமிழகத்தில் இருக்கின்றன. இருந்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை மனதிலே கொண்டு மின்சார ரெயில் விடுவதற்காக அதை மாற்றியமைப்பதற்கு மத்திய அரசுக்கு தமிழக அரசு பரிந்துரை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 467. திரு. எம். கே. பாலன், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

467—

சைதாப்பேட்டை ஆற்றின் ஓரத்தில் தடுப்புச் சுவர் அமைத்தல்.

*9511—திரு. எம். கே. பாலன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதாப்பேட்டையைச் சுற்றியுள்ள ஆற்றின் ஓரம் தடுப்புச் சுவர் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ரூ. 14.85 கோடி மதிப்பீட்டு செலவில் சென்னை அடையாறு ஆற்றின் கரையோரமாக தடுப்புச்சுவர் கட்டுவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.